**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 88 / 2023**

**2025ம் வருடம் ஜூலை மாதம் 14 ம் நாள் திங்கட்கிழமை**

ம.சா.2 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திருமதி. வனஜா என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| பெயர் | **ஆறுமுகம்** | த/பெ | தடியன் |
|---|---|---|---|
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை :**

நான் கொத்தனார் மேஸ்திரி என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இறந்துபோன சுமதி என்னிடம் பணிபுரிந்தார் என்பதை நிரூபிக்க வருகை பதிவேடு மற்றும் இதர ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன சுமதி தினமும் ரூ.700/– சம்பளமாக பெற்றுவந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மானாமதுரை பகுதியில் சித்தாளுக்கு நாள் ஒன்றுக்க ரூ.500/– தான் சம்பளம் என்றும் நான் வழக்கிற்காக ரூ.700/– சம்பளம் என்று பொய்யாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இறந்துபோன சுமதி பேருந்தில் பயணம் செய்த போது கீழே விழுந்து இறந்துபோனதாக கேள்விபட்டேன். நான் கொத்தனார் மேஸ்திரி அல்ல, இறந்துபோன சுமதி என்னிடம் வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை